# விலைமனுக்களுக்கான அழைப்பு

# இலங்கை புகையிரத சேவைகள்

## ஒப்பந்த இல. SRS/F.7814

## 02 வருட காலத்திற்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலுள்ள நிரந்தரமான சிற்றுண்டிச்சாலை அலகுகள் மற்றும் நீண்டதூர புகையிரதங்களின் நடமாடும் சிற்றுண்டிச்சாலைகளை வாடகைக்கு வழங்குதல்

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலுள்ள நிரந்தரமான சிற்றுண்டிச்சாலை அலகுகள் மற்றும் நீண்டதூர புகையிரதங்களினுள் நடமாடும் சிற்றுண்டிச்சாலைகளில் உணவு மற்றும் பானங்களை விற்பனை செய்வதற்காக உணவக சேவைத் துறையில் குறைந்தபட்சம் ஐந்து வருடகால சித்திகரமான அனுபவத்தைக் கொண்ட பொதுமக்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

நிரந்தர மற்றும் நடமாடும் சிற்றுண்டிச்சாலை அலகுகள் இரண்டும் ஒற்றை அலகாக மதிப்பீடு செய்யப்பட்டு கையளிக்கப்படும்.

சமையலறை மற்றும் பேக்கரி சகிதமான நிரந்தர சிற்றுண்டிச்சாலை அலகுகள்

- கொழும்பு கோட்டையிலுள்ள 1ஆம் மற்றும் 2ஆம் வகுப்பு சிற்றுண்டிச்சாலை (03ஆம் இலக்க மேடை)
- கொழும்பு கோட்டையிலுள்ள 3ஆம் வகுப்பு சிற்றுண்டிச்சாலை (03ஆம் இலக்க மேடை)
- இரண்டு கடலை விற்பனை கூடங்கள் (03ஆம் இலக்க மேடை)
- சிறிய விற்பனை கூடங்கள் (2 மற்றும் 3ஆம் இலக்க மேடைகள்)
- சிறிய விற்பனை கூடங்கள் (5 மற்றும் 6ஆம் இலக்க மேடைகள்)
- புகையிரத நிலையத்திற்குப் பின்னாலுள்ள சிறிய விற்பனை கூடம் (வெளியேறும் வாசலுக்குப் பக்கத்தில் - 100 சதுர அடிகள்)
- சமையலறை மற்றும் பேக்கரி

நடமாடும் சிற்றுண்டிச்சாலை அலகுகள்

நீண்டதூர சுற்று (போக வர) புகையிரத பயணம்

- 1045/1046 பதுளை இரவு தபால்
- 1005/1006 பொடி மெனிக்கே
- 1015/1016 உடரட்ட மெனிக்கே
- 6079/6080 மீனகயா நகர்சேர் கடுகதி
- 1023/1024 டிகிரி மெனிக்கே
- 4077/4078 யாழ் தேவி
- 4089/4090 யாழ்ப்பாண இரவு தபால்
- 4021/4022 யாழ்ப்பாண நகர்சேர் கடுகதி (A/C)
- 1019/1020 கண்டி நகர்சேர் கடுகதி
- 1029/1030 கண்டி நகர்சேர் கடுகதி (A/C)
- 1033/1034 கண்டி கடுகதி

மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 10,000.00 ரூபாவை (பத்தாயிரம் ரூபா) மட்டும் செலுத்துவதன் பேரில் 2023-12-19ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்திலிருந்து பெறப்படக்கூடியதான படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2023-12-20ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவுறும் என்பதுடன் முடிவுறுத்தல் காலம் முடிவடைந்தவுடன் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நேரத்திற்கு ஒன்றில் முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்), இலங்கை புகையிரத சேவைகள், பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும்.

கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, பிரதிப் பொது முகாமையாளர் பெறுகைகள் அலுவலகத்தில் 2023-12-13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று இடம்பெறும்.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் சிற்றுண்டிச்சாலைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு விலைமனுதாரர்களுக்கு அனுமதி வழங்கப்படும். இது தொடர்பாக பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம்) அவர்களைத் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்: 011-4600944

விலைமனுக்களுடன் 2,500,000.00 (இருபத்தைந்து இலட்சம் ரூபா) ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது ஒன்றில் இலங்கைப் புகையிரத சேவைகள் தலைமை கணக்காளரால் ஏற்றுக்கொள்ளக்கூடிய செல்லுபடியாகும் பண அலகாக வைத்தல் வேண்டும் அல்லது இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் வங்கி உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும். அந்த வகையில் வைக்கப்படும் வங்கி உத்தரவாதமானது ஒப்பந்தம் செயற்படும் 06 மாத காலத்திற்கு செல்லுபடியாகும் நிபந்தனையற்ற உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.

இலங்கை புகையிரத சேவையின் ஊழியர்கள் அல்லது அவர்களின் நேரடி குடும்ப அங்கத்தவர்கள் இந்தக் கேள்வியில் பங்குபற்றுவதற்கு தகுதியற்றவர்கள்.

இறுதித் தீர்மானத்தை எடுக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலதிக தகவல்களை ஒன்றில் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்பிலக்கம்: 011-2438078 / 011-2436818 / 011 -4600944**
**தொலைநகல் இலக்கம்: 011-2432044**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**